"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"
தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து
Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2018

## தமிழ்மொழி ஆண்டு 6

**நேரம்: 120 நிமிடம்** **சுட்டெண்:** ________________

**வினாத்தாளில் விடை எழுதுக.**

### பகுதி - 1

**1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. குறுகிய ஓசையைக் கொண்ட உயிரெழுத்துகளின் எண்ணிக்கை
(ஏழு, ஐந்து, பன்னிரண்டு)

2. ஏடு, புத்தகம், பனுவல் என்பவற்றைக் குறிக்கும் சொல்
(அட்டை, நூல், சுவடி)

3. ஓரடிப் பாடல்களால் அமைந்த நீதிநூல்
(மூதுரை, திருக்குறள், ஆத்திசூடி)

4. நாய் குரைக்கும் அதுபோல நரி
(உறுமும், ஊளையிடும், கத்தும்)

5. மரத்திலே வாழ்பவனுக்கு முதுகிலே மூன்று கோடு. அவன்
(குரங்கு, ஓணான், அணில்)

6. எழுவாய் வேற்றுமை என அழைக்கப்படுவது
(முதலாம் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை)

7. மரங்கள் நிறைந்த பகுதி காடு போல தென்னைகள் நிறைந்த பகுதி
(பற்றை, தோப்பு, வரிசை)

8. காற்பந்து ஆட்டத்தில் வென்றகுழு வெல்லாதகுழுவை ஆரத்தழுவியது.
இதில் எதிர்மறைப் பெயரெச்சம்
(வெல்லாத, வென்ற, ஆர)

9. சுனாமி என்ற சொல்
(அரபுமொழி, ஜப்பான்மொழி, வடமொழி)

10. மலையும் மலைசார்ந்த நிலத்தையும் குறிப்பது
(மருதம், குறிஞ்சி, முல்லை)

11. மக்களுக்கு உழைப்பே உயர்வைக் கொடுக்கும். இதில் ஏகார இடைச்சொல் ஏற்றுள்ள சொல்
(உழைப்பு, உயர்வு, மக்கள்)

12. வளியினால் உண்டாகும் இயற்கை அழிவு
(புயல், ஆழிப்பேரலை, எரிமலை)

13. இராவணன் வெட்டு காணப்படும் கற்பாறை அமைந்துள்ள இடம்
(மன்னார், திருகோணமலை, சிலாபம்)

14. யானைகள் ஊரினுள் புகுந்து பயிர்களை அழித்தன. இதில் அழித்தன என்பது
(அஃறிணை ஒன்றன்பால், உயர்திணை ஒன்றன்பால், அஃறிணை பலவின்பால்)

15. இளமையில் கற்றல் 'கல்மேல் எழுத்துப் போல' இருக்கும். இவ் உவமைத்தொடர் விளக்கும் பொருள்
(மறைதல், அழியாததன்மை, ஒட்டியிருத்தல்)

(15×1=15 புள்ளி)

**2. ஒத்தபொருட்சொல் எழுதுக.**

1. கவி ______________________
2. அழகு ______________________
3. மன்னன் ______________________
4. மனம் ______________________
5. கேண்மை ______________________
6. ஒலி ______________________

(6×1=6 புள்ளி)

**3. எதிர்ப்பொருட்சொல் எழுதுக.**

1. தோற்றம் ______________________
2. இயற்கை ______________________
3. நீதி ______________________
4. குறை ______________________
5. வளர்பிறை ______________________
6. கனவு ______________________

(6×1=6 புள்ளி)

**4. சேர்த்தெழுதுக.**

1. பட்டு + சேலை = ______________________
2. மலை + அருவி = ______________________
3. உடல் + பயிற்சி = ______________________
4. வெள்ளம் + பெருக்கு = ______________________
5. மூன்று + பத்து = ______________________
6. காடு + தீ = ______________________

(6×1=6 புள்ளி)

**5. பிரித்தெழுதுக.**

1. வெண்ணிறம் = ______________ + ______________
2. தொழில்நுட்பம் = ______________ + ______________
3. பூங்குயில் = ______________ + ______________
4. சமையலறை = ______________ + ______________
5. பொழிப்புரை = ______________ + ______________
6. மண்ணீர் = ______________ + ______________

(6×1=6 புள்ளி)

**6. தரப்பட்ட சொற்களை வைத்து திருக்குறள்களை நிறைவு செய்க.**

1. விருப்புஅறாச் சுற்றம் ______________________________

______________________________________

2. கொடுத்தலும் இன்சொலும் ______________________________

______________________________________

(2×2=4 புள்ளி)

**7. கீழ்க்காணும் வாக்கியங்களில் எழுவாய் அடை, எழுவாய், பயனிலை அடை, பயனிலை என்பவற்றைத் தெரிவுசெய்து அட்டவணைப்படுத்துக.**

1. அழகிய மான் துள்ளித்துள்ளி ஓடியது.
2. சிறிய குழந்தை தவழ்ந்து சென்றது.
3. ஆண்மயில் தோகையை விரித்து ஆடியது.
4. பள்ளி மாணவர்கள் தேர்வைச் சிறப்பாக எழுதினார்கள்.

| எழுவாய் அடை | எழுவாய் | பயனிலை அடை | பயனிலை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(16×½=8 புள்ளி)

**8. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பனிகாலத்தில் அணியும் ஆடைகள் எவை? 1 புள்ளி

______________________________

______________________________

2. சுவிஸ் என்ற கூட்டாட்சி நாட்டை உருவாக்கிய மூன்று மாநிலங்களும் எவை? 1 புள்ளி

______________________________

3. நாட்டார் பாடல்களின் வகைகள் மூன்றினைத் தருக. 1 புள்ளி

______________________________

______________________________

4. கன்னியா வெந்நீர்க் கிணறுகள் பற்றிப் பாடிய புலவர் யார்? 1 புள்ளி

______________________________

5. வேற்றுமை என்றால் என்ன? மூன்றாம் வேற்றுமை உருபுகளையும், பொருள்களையும் தருக. 2 புள்ளி

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

6. உமக்குத் தெரிந்த இரு பழமொழிகளைத் தருக. 1 புள்ளி

______________________________

______________________________

______________________________

**9. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி 75 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. திருகோணமலை
2. நாட்டுப்பாடல்கள்
3. ‘முயற்சி உயர்வைத் தரும்’ என்னும் பொருள் விளங்க ஒரு கதை.

(7 புள்ளி)

## பகுதி – 2

**1. அ. கீழ்க்காணும் வாக்கியங்களை உமக்குத் தெரிந்த பிறமொழியில் மொழிபெயர்த்து எழுதுக.**

1. நாம் கோடைகாலத்தில் நீந்துவோம்.

   ______________________________________________

2. இயற்கை என்றும் அழகானது.

   ______________________________________________

3. வில்கெம்ரெல் சுவிஸில் பிறந்தார்.

   ______________________________________________

4. பாட்டிக்குக் கடிதம் எழுதினேன்.

   ______________________________________________

5. பண்பாட்டு உடைகளை அணிவோம்.

   ______________________________________________

6. பள்ளி மாணவர்கள் விலங்ககத்திற்குச் சென்றார்கள்.

   ______________________________________________

(6×½=3 புள்ளி)

**ஆ. அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் பொருத்தமானதைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**

அடர்ந்து உயர்ந்த வேப்பமரம் ஒன்று (பென்னம்பெரிய / சின்னஞ்சிறிய) நாணற்புற்களைப் பார்த்து, அற்ப புற்களே! என்று ஏளனமாகச் சிரித்தது. நானே பெரியவன் என்று நினைத்துச் செருக்குக் கொண்டது. 'ஓ! நாணற்புற்களே, ஆற்றிலே (வெள்ளம் / வெல்லம்) பெருகும்போது நீங்கள் பயந்து தலைசாய்க்கிறீர்கள்; காற்று வீசும் போது அச்சத்துடன் (மூலையும் முடுக்கும் / அங்குமிங்கும்) சாய்கிறீர்கள். என்னைப்போல் வீரத்தோடு புயலை எதிர்த்து நின்றால் என்ன?' என்று கூறி மிடுக்குடன் நிமிர்ந்து நின்றது. அப்போது அப்புற்களில் ஒன்று பெரியவரே! 'தங்களிடம் உள்ள (வலிமை / வளிமை) எங்களிடம் இல்லை. நாங்கள் (பனிந்து / பணிந்து) நடந்து வாழ்வதால் என்றும் நிலைத்து நிற்கிறோம்' என்று (அடக்கத்தோடு / அடக்கத்தை) கூறியது. அன்று இரவு வீசிய புயற்காற்றுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் தலைக்கனம் கொண்ட வேப்பமரம் சரிந்து விழுந்தது. பணிவுடன் நின்ற நாணற்புற்கள் நிமிர்ந்து நின்றன.

**'அடக்கம் உயர்வைத் தரும்'**

(6×1=6 புள்ளி)

**2. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

தற்காலத்தில் தாதிச்சேவையின் 'தாய்' எனப் போற்றப்படுபவர் புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையார். இவரை விளக்கேந்திய பெருமாட்டி என்றும் அழைப்பர். தாதித்தொழில் என்பது மக்களுக்கு ஆற்றும் மிகச்சிறந்த தொண்டாகும். இது தாய்க்கு நிகரான அன்புடனும் பொறுமையுடனும் செய்யும் பணியாகும். இச்சேவையின் போது வெள்ளைச்சீருடை அணிந்து பணி செய்வார்கள். இத்தொழிலின் தூய்மையை இவ் வெள்ளைநிறம் உணர்த்தி நிற்கின்றது. இவரால் தொடக்கப்பெற்ற இச்சேவையானது நகரங்களில் மட்டுமன்றி பின்தங்கிய ஊர்களிலும் விரிவுபடுத்தப்பெற்றுள்ளது. இதனால் மனிதகுலம் பெரும் பயனடைகிறது. இவர் பிறந்த நாளாகிய வைகாசித் திங்கள் 12ஆம் நாள் தாதியர் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

1. தாதிச்சேவையின் 'தாய்' எனப் போற்றப்படுபவர் யார்?

   ______________________________

2. இவரை வேறு எவ்வாறு அழைப்பர்?

   ______________________________

3. தாதிச்சேவையின் சீருடை எதனை உணர்த்தி நிற்கின்றது?

   ______________________________

4. மக்களுக்கு ஆற்றும் தொண்டுகளில் மிகச்சிறந்தது எது?

   ______________________________

5. தாதிச்சேவை எங்கு எல்லாம் விரிவுபடுத்தப்பெற்றுள்ளது?

   ______________________________

6. தாதியர் நாளாகக் கொண்டாடப்படும் நாள் எது?

   ______________________________

(6×1=6 புள்ளி)

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| **விடைத்தாள் மதிப்பீடு** | **முழுப்பெயர்** | **கையொப்பம்** | **மொத்தப்புள்ளிகள்** |
| **முதலாம் முறை** | | | |
| **இரண்டாம் முறை** | | | |
| **இறுதிப்புள்ளிகள்** | | | |